**தென்னை சுருள் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வாகன விழிப்புணர்வு முகாம்**

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆணையர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தோட்டக்கலைத்துறை இணைந்து பொள்ளாச்சி பகுதிகளில் உள்ள தென்னை விவசாயிகள் பலரையும் சந்தித்து தென்னை சுருள் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு முகாம் நடத்தி செயல்முறை விளக்கங்களையும் வழங்கி வருகின்றனர்.

இம்முகாமின் இரண்டாவது நாளான இன்று, (ஏப்ரல் 6 2025) பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு மற்றும் ஆனைமலை வட்டாரங்களில் தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலோடு, விழிப்புணர்வு வாகனம் மூலமாக உழவர்களுக்கு விழிப்புணர்வு முகாம் மேற்கொள்ளப்பட்டது.

பொள்ளாச்சி தெற்கு வட்டாரத்தில் உள்ள சூளேஸ்வரன்பட்டி கிராமத்தில், தென்னையில் ருகோஸ் சுருள் வெள்ளை ஈ ஒருங்கிணைந்த மேலாண்மை விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சிபயிற்சியில் தோட்டக்கலை இணை இயக்குனர் ஜி அழகுமலை அவர்கள் தலைமை உரையாற்றினார்கள், தோட்டக்கலை உதவி இயக்குனர் திருமதி ஆர். வசுமதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த் தினார்கள். த.வே.ப.க பூச்சியல் இணை பேராசிரியர் முனைவர் க. கணேசன் அவர்கள் தொழில்நுட்பவுரை ஆற்றினார்கள். பயிற்சிக்கான ஏற்பாட்டினை சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி தலைவர் திரு.சந்திரமோகன், முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் கோ. அருள்குமார் மற்றும் தோட்டக்கலை துறை அலுவலர்கள் மேற்கொண்டார். இப்பயிற்சியில் 75–க்கும் அதிகமான முன்னோடி தென்னை விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதில் வெள்ளை ஈக்களை இயற்கை முறையில் கட்டுப்படுத்துவது குறித்த செயல் விளக்களும் செய்து காண்பிக்கப்பட்டன.

இதே நாளில், பொள்ளாச்சி வடக்கு வட்டாரத்தில் உள்ள மூலனூர், ஆவளப்பம்பட்டி மற்றும் கொண்டைக்கவுண்டம்பாளையம் ஆகிய கிராமங்களிலும் தென்னையில் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்துவது குறித்த ஒருங்கிணைந்த மேலாண்மை விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இப்பயிற்சிகளை கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், பயிர் பாதுகாப்பு இயக்ககமும் தமிழ்நாடு அரசு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையும் இணைந்து நடத்தின. இப்பயிற்சியினை உதவி பேராசிரியர் வ. பாஸ்கரன், வேளாண்மை தோட்டக்கலை உதவி இயக்குனர் சௌமியா, உதவி தோட்டக்கலை அலுவலர் குமாரசாமி, ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். இதில் சுமார் 55 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதில் மேலாண்மை முறைகளை எவ்வாறு கையாள்வது என்ற செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

ஆனைமலை வட்டாரத்தில் உள்ள அங்களாகுறிச்சி கிராமத்தில் தென்னையில் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியினை பயிர் பாதுகாப்பு இயக்ககம் கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாடு அரசு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சென்னை சேர்ந்து நடத்தியது. இப்பயிற்சியை தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் முனைவர் சுதாலட்சுமி மற்றும் முனைவர் அருள் பிரகாஷ், உதவி தோட்டக்கலை இயக்குநர் கோபிநாத் மற்றும் தோட்டக்கலை அலுவலர் பேகம் பிர்தோஸ் போன்றோர் சிறப்பாக நடத்தினர்.

இதில் 40–க்கும் அதிகமான முன்னோடி தென்னை விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர் இதில் பூச்சி மேலாண்மை முறைகளை எவ்வாறு கையாள்வது என்ற செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 4.67 லட்சம் ஹெக்டர் பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டு வருகின்றது. இதில் 50% அதிகமான பரப்பளவில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிக அளவில் ஏற்பட்டு, மகசூல் இழப்பை ஏற்படுத்தி வருகின்றது. ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்கள், கடந்த 2016–ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டில் தென்னை பயிரிடப்படும் மாவட்டங்களில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

இந்த பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பலவிதமான ஆராய்ச்சிகள் செய்து, அதன் வெளிப்பாடாக கீழ்வரும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை உழவர்களுக்கு அறிவுறுத்துகின்றது.

- தென்னங்கீற்றுகளில் அடிபரப்பை நோக்கி தண்ணீரை பீய்ச்சி அடித்தல், மஞ்சள் நிற பாலித்தின் தாள்களில், இரண்டு புறமும் விளக்கெண்ணை தடவி ஏக்கருக்கு 20 என்ற அளவில் தென்னை மரத்தில், 6 அடி உயரத்தில் தொங்க விட்டோ, அல்லது தண்டு பகுதியில் சுற்றியோ வெள்ளை ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். என்கார்சியா ஒட்டுண்ணி தோப்புக்கு 100 என்ற அளவில் விடுவதால், வெள்ளை ஈக்களை படிப்படியாக குறைக்கலாம்; அல்லது அப்பர்ட்டோகிரைசா இரைவிழுங்கி முட்டைகளை ஏக்கருக்கு 400 என்ற விகிதத்தில் கீற்றுகளில் இணைத்து வெள்ளைகளின் தாக்குதலை குறைக்கலாம். மேலும் ஒட்டுண்ணிகளின் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு, தென்னை மரங்களுக்கு இடையே வாழை, கல்வாழை, சீதா ஆகிய பயிர்களை ஊடுபயிராக நடலாம். 5% வேப்பெண்ணையை ஒட்டு திரவம் கலந்து கீற்றுகளின் அடியில் நன்கு நனையும் படி தெளிக்கலாம். வெள்ளை ஈக்களின் சேதத்தால் ஏற்படும் கரும்பூசனத்தை நீக்க 25 கிராம் மைதா மாவு பசையை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். பரிந்துரைக்கப்பட்ட உரங்களை கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தென்னையில் இயற்கையிலேயே உருவாகி செயல்பட்டு வரும் இயற்கை எதிரிகளாகிய என்கார்சியா ஒட்டுண்ணி மற்றும் அப்பர்ட்டோகிரைசா இரைவிழுங்கி ஆகியவற்றை காக்கும் பொருட்டு, பூச்சிக்கொல்லிகளில் பயன்படுத்துவதை அறவே தவிர்க்க வேண்டும்

மேற்கண்ட வழிமுறைகளை தமிழகம் எங்கும் உள்ள தென்னை பயிரிடப்படும் உழவர்களுக்கு சென்று சேரும் வண்ணம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பயிர் பாதுகாப்பு இயக்ககம் கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாடு அரசு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சென்னை ஆகியவை இணைந்து மாவட்ட அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தியது.

பொள்ளாச்சி தெற்கு சூளேஸ்வரன்பட்டில் நடைபெற்ற பயிற்சி









பொள்ளாச்சி வடக்கு
(மூலனூர், அவளப்பம்பட்டி மற்றும் கொண்டை கவுண்டன் பாளையம்)





வெள்ளை ஈ கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு




உழவர்களுக்கு பயிற்சி முகாம்






வெள்ளை ஈ இரை விழுங்கி குறித்த செயல் விளக்கம்




உழவர்கள் – விஞ்ஞானிகள் கலந்துரையாடல்



வெள்ளை ஈ கட்டுபடுத்த மஞ்சள் ஒட்டு பொறித் தாள் வைத்தல்

## ஆனைமலை

| | |
|---|---|
|   |  |
| வெள்ளை ஈ கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு | உழவர்களுக்கு பயிற்சி முகாம் |
|  |  |
| உழவர்கள் – விஞ்ஞானிகள் கலந்துரையாடல் | வெள்ளை ஈ கட்டுபடுத்த மஞ்சள் ஒட்டு பொறித் தாள் வைத்தல் |